செய்தி வெளியீடு : 737 14.11.07



# செய்தி வெளியீடு

எண். நாள் 14.11.2007

## 2 மாணவிகளுக்கு இருதய அறுவை சிகிச்சைக்காக ரூ. 1 இலட்சம் 50 மாணவ / மாணவியர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் 17 மருத்துவர்களுக்கு பணி நியமன ஆணைகள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வழங்கினார்

சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்கள் கண் பார்வை மற்றும் இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக இருதய நோய் மற்றும் கண் பார்வை பாதிப்புகளை கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்காக பல முன்னோடி திட்டங்கள் சென்னை மாநகராட்சி செயல்படுத்தி வருகின்றது.

ஏழை, எளிய மாணவ / மாணவியர்கள் தங்கு தடையின்றி தொடர்ந்து கல்வி பயில பள்ளி சுகாதார திட்டத்தின் கீழ் இருதய பரிசோதனை 464 பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு மேற்கொள்ளப்பட்டது. அதில் 13 மாணவ / மாணவியர்கள் இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டு 2 மாணவியர்களுக்கு இருதய அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார வசதி இல்லாத இம்மாணவர்களுக்கு குழந்தைகள் தினமான இன்று இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்டமைக்காக தலா ரூ. 50,000/–க்கான காசோலையினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று ( 14.11.2007) தலைமைச் செயலகத்தில் வழங்கினார். மேலும், குழந்தைகள் தினத்தினை கொண்டாடும் வகையில் மாநகராட்சி பள்ளி குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினார்.

இந்தியாவிலேயே முதல்முறையாக மாநகராட்சி பள்ளி மாணவ / மாணவியர்களுக்காக இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்வதற்காக நிதி உதவி வழங்கும் திட்டம் சென்னை மாநகராட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஐஸ் அவுஸ், மாநகராட்சி துவக்கப்பள்ளியில் பயின்று வரும் மாணவி செரினா ( வயது – 10) மற்றும் வண்ணாரப்பேட்டை, மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் பயின்று வரும் மாணவி மோனிகா ( வயது–10) விற்கும் இருதய அறுவை சிகிச்சைக்காக நிதி உதவி வழங்கப்பட்டது. நிதி உதவி பெற்றுக் கொண்ட மாணவியர்கள் மாண்புமிகு அமைச்சடர்

அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர். எஞ்சியுள்ளவர்களுக்கு விரைவில் இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு நிதி உதவி வழங்கப்படும். இதனால் மாணவ, மாணவியர்கள் தாமதமின்றி சிகிச்சை பெறவும், தடையின்றி கல்வி தொடரவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து சென்னை மாநகராட்சி பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் இருருதய பரிசோதனை நடைபெற்று வருகிறது.

அதே போன்று சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறை மூலம் 23ஆயிரத்து 969 மாநகராட்சி மாணவ / மாணவியர்களுக்கு சென்னை மாவட்ட கண்பார்வை இழப்பு தடுப்பு திட்டத்தின் கீழ் கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் 295 மாணவ / மாணவியர்களுக்கு குறைபாடுகள் கண்டறியப்பட்டது. மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 50 மாணவ / மாணவியர்களுக்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் மூக்குக் கண்ணாடிகள் வழங்கினார். மாணவ / மாணவியர்கள் பிற்காலத்தில் கண்பார்வை பாதிப்புக்குள்ளாவது தடுக்கப்பட்டு, தங்கு தடையின்றி கல்வி தொடர வழிவகை செய்யப்பட்டுள்ளதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்.

அதன் பின்பு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பணி மூப்பு அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட 17 மருத்துவர்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள். இதில் 10 மருத்துவர்கள் சென்னை மாநகராட்சி மகப்பேறு மையங்களிலும், 7 மருத்துவர்கள் மாநகராட்சி மருந்தகங்களிலும் பணிபுரிவார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தலைமை வகித்தார். / சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., துணை மேயர் திருமதி ஆர்.சத்தியபாமா, மன்ற ஆளுங்கட்சித்தலைவர் திருந.இராமலிங்கம், மன்ற எதிர்க்கட்சித்தலைவர் திரு.சைதை ப.ரவி, இணை ஆணையர்(கல்வி) திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப. நிலைக்குழுத்தலைவர் (பொது சுகாதாரம்) திரு.அ.மணிவேலன், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) திருமதி.கே.ஜானகி, நியமனக்குழு உறுப்பினர்கள் திரு.த.வி. முத்துக்கிருட்டிணன், திரு.மு.வேலாயுதம் மற்றும் மாநகராட்சி பொது சுகாதார, குடும்ப நல அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9